# ‘நீங்கள் நலமா’ திட்டம்: பொதுமக்களிடம் அமைச்சர்கள் கருத்துக் கேட்கும் காட்சிகள்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு நேற்று முன்தினம் (06.03.2024), நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் காணொலிக் காட்சி வாயிலாக தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார். உடன் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று முன்தினம் (06.03.2024) சிந்தாதிரிப்பேட்டை, சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறையிலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார். உடன் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



நேற்று முன்தினம் (06.03.2024) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்தில் உள்ள மின்னகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ‘நீங்கள் நலமா’ திட்டத்தின் கீழ் பயனாளிகளை தொடர்பு கொண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வாயிலாக பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் மின் சேவைகள் குறித்து நேற்று முன்தினம் (06.03.2024) கருத்துகளை கேட்டறிந்தார். உடன் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு நேற்று முன்தினம் (06.03.2024), கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களால் பயன்பெற்ற தூத்துக்குடி, காஞ்சிபுரம், சேலம், வேலூர், சென்னை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் திருப்பத்தூரிலுள்ள முகாம் அலுவலகத்திலிருந்து தொலைபேசி வாயிலாக நேரடியாக தொடர்பு கொண்டு நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறிந்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேற்று முன்தினம் (06.03.2024) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (06.03.2024) தொடங்கி வைத்த ‘நீங்கள் நலமா’ திட்டத்தை முன்னிட்டு பயனாளிகளைத் தொடர்பு கொண்டு துறை ரீதியான நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களை கேட்டறியும் திட்டமாகும். அதன் தொடர்ச்சியாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களை தொலைபேசியில் அழைத்து நலம் விசாரித்து அவர்கள் தேவை குறித்து கேட்டறிந்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் நேற்று முன்தினம் (06.03.2024), சென்னை முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களால் பயன்பெற்ற சென்னை, செங்கல்பட்டு, கடலூர், ஈரோடு, நீலகிரி, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தொலைபேசி வாயிலாக நேரடியாக தொடர்பு கொண்டு நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை பதவி நீக்க அவசியமில்லை!

### சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு!

சென்னை, மார்ச் 8-

சனாதன பேச்சு தொடர்பான வழக்கில் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு ஆகியோரை பதவிநீக்கம் செய்ய அவசியமில்லை என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த் தீர்ப்பு வழங்கி உள்ளார். இதன் மூலம் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு, ஆ.ராசா எம்.பி. க்கு எதிரான கோ-வாரண்டோ வழக்குகள் முடித்து வைக்கப்பட்டு உள்ளது.

அண்மையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை காமராஜர் அரங்கில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்றார்.

இந்த மாநாட்டில் பேசிய உதயநிதி ஸ்டாலின், கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக் கட்ட வேண்டும். அப்படித் தான் இந்த சனாதனம். சனாதனத்தை எதிர்ப்பதை விட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம். சனாதனம் என்றால் என்ன? சனாதனம் என்கிற பெயரே சமஸ்கிருதத்தில் இருந்து வந்ததுதான். சனாதனம் சமத்துவத்திற்கும் சமூக நீதிக்கும் எதிரானது.

சனாதனம் என்பதன் அர்த்தம் என்ன? நிலையானது, அதாவது மாற்ற முடியாதது. யாரும் கேள்வி கேட்க முடியாது என்பதுதான் சனாதனத்திற்குரிய அர்த்தம். எல்லாவற்றையும் மாற்ற வேண்டும். எதுவுமே நிலையானது கிடையாது எல்லாவற்றுக்கும் நாம் கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காக உருவான இயக்கம் தான் இந்த கம்யூனிஸ்ட் இயக்கமும், திராவிட முன்னேற்ற கழகமும் என்று பேசினார்.



சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு சனாதனத்திற்கு எதிராக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியது பெரும் சர்ச்சையை கிளப்பி இருந்தது. அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோருக்கு எதிராக கோ வாரண்டோ வழக்கு நிலுவையில் இருந்தது.

திராவிட கொள்கைக்கு எதிராக கூட்டம் நடத்த அனுமதி கேட்டு திருவேற்காட்டை சேர்ந்த மகேஷ் கார்த்திகேயன் என்பவர் சென்னை உயர்மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன், சனாதான ஒழிப்பு மாநாட்டில் தமிழக அமைச்சர்கள் கலந்து கொண்டு பேசியதன் விளைவாகவே தற்போது திராவிட கொள்கைக்கு எதிராக கூட்டம் நடத்த அனுமதி கேட்டு வழக்கு தொடரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இன்னொரு பக்கம் இதே விவகாரத்தில் கோ-வாரண்டோ வழக்கும் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர் பாபு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டு.. நீதிபதி அனிதா சுமந்த் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வந்தது. இந்த வழக்கில் கடந்த மாதம் விசாரணை முடிந்த நிலையில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் சனாதன பேச்சு தொடர்பான வழக்கில் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபுவை பதவிநீக்கம் செய்ய அவசியமில்லை என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த் தீர்ப்பு வழங்கி உள்ளார். இதன் மூலம் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு, எம்.பி. ஆ.ராசாவுக்கு எதிரான கோவாரண்டோ வழக்குகள் முடித்துவைக்கப்பட்டு உள்ளன.

கழக தலைவர், தமிழக முதல்வர் பிறந்த நாள் விழா! புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

## கறம்பக்குடி பேரூர் கழகம் சார்பில் 3000 பேருக்கு அன்னதானம்!

### மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை, மார்ச் 8

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கறம்பக்குடி பேரூர் தி.மு.க. சார்பில் கழகத்தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு 3000 பேருக்கு 4.3.2024 - திங்கட்கிழமை டி.வி.வி திருமண மஹாலில் மாபெரும் அன்னதானம் நிகழ்ச்சி நடைபெற்றது.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை வகித்தார். பேரூர் கழக செயலாளர் பேரூராட்சித்தலைவர் உமுருகேசன், வடக்கு ஒன்றியச் செயலாளர் வெ.முத்துக் கிருஷ்ணன், தெற்கு ஒன்றிய செயலாளர், மாவட்ட அறங்காவல் குழுத்தலைவர் தவ. பாஞ்சாலன், ஒன்றிய பெருந் தலைவர் மாலா ராஜேந்திர துரை, எஸ்.எஸ்.கருப்பையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்,

விழாவில் எம்.அப்துல் லத்திப், என்.அப்துல் அஜீஸ், ஏ.செல்வராஜ், டி.மதி வாணன், எம்.சாதிக் பாட்ஷா, சத்யா ரவிக்குமார், எஸ்.எம். சின்னத்தம்பி, டி.ஆர்.துரைராஜ், பி.தங்கமணி, எஸ்.ஆர். பாலையா கே.அப்துல் அலீம், பி.பரூக், நைனாமுகமது, சிவ.திருமேனிநாதன். என்.ஆர்.பரிமளம், தொ. கருப்பையா, கே.அசோக் குமார், ஞானச்சந்திரன், வி. புண்ணிய மூர்த்தி, எம்.பிரபாகரன், பி.செந்தில்குமார், டி.பாஸ்கர், எம்.சதீஸ்குமார், உமர் பாட்ஷா, எம்.எ. டி.ஜியா, முகமது நியாஸ், சேகர், உபயத்துல்லா, இதயத்துல்லா, பர்சாத், கே.திருமேனிநாதன். நாகரெத்தினம், எஸ்.பழனியப்பன், தர்மலிங்கம், டி.ஆர்.யுவராஜ், சி.பாலு, எம்.அப்பு, வினோத் வழக்கறிஞர், டி. ஆர்.எஸ்.முத்து, எஸ்.பி. ராஜா, ஜி.ஹரிபாஸ்கர், கே.ஆர்.முத்துபாண்டி, கே. ஆர்.மணிகண்டன், சேட்டு, அல்அமீன், கனகராஜ், எஸ். சுகுமார், எஸ்.சரவணன், வழக்கறிஞர்ராஜ்குமார், ஜி.வினோத்சாய்ராம். சுமன். போஸ்குமார், தங்கையா, ராமு. அன்சாரி, அன்பு, பஷீர், வெள்ளைச்சாமி, எஸ்.ராஜசேகர், தேவன், முருகேஷ். வெங்கடாசலம், ஜெயபால், அடைக்கலம், சிதம்பரம், ராம்சுந்தர், சங்கர், கிருஷ்ணசாமி, கார்த்தி, இ.வின்செண்ட் வி.கே.வீரப்பன், ஜி.தெட்சிணாமூர்த்தி, எம்.அப்பு, சி.வெற்றிவேந்தன், ரமேஷ், செல்லத்துரை, எல்.பெரியதம்பி, எம். ராஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ் மூதாட்டி

## ஔவையார் திருவுருவச் சிலைக்கு இன்று மலர் வணக்கம் நிகழ்ச்சி!

### அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 8 -

ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருக்கும் புலவர் பெருமாட்டியருள் ஔவையாரின் அருமைத் திருப்பெயர் என்றும் அழியாமல் நிலைத்திருக்கும் திருப்பெயரும் தவப்பெயருமாகும்.

‘அகர முதல எழுத்தெல்லாம்’ என்பது போல ஔவை முதல அறிவெல்லாம் என்று அறிவுக்கே பரியாய நாமமாக ஔவையார் ஆண், பெண், இளைஞர், முதியர் என எல்லோராலும் வழிபாட்டுணர்ச்சியோடு வணங்கப்படுகிறார்.

அதியமானுக்காகக் காஞ்சியிலிருந்து ஆட்சிப்புரிந்த தொண்டைமானிடம் தூது சென்று நிகழவிருந்த போரை நிறுத்திய பெருமை மிக்கவர் ஔவையார். உலக வரலாற்றில் இரண்டு வேந்தர்களுக்கிடையில் தூது சென்ற பெருமடந்தையராகப் பெருமை கொண்டவர் ஔவையார் ஆவார்.

சேரமான் மாரிவண்கோவும், சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும் ஒருங்கிருப்பக் கண்டு உவந்து’ என்றும் தமிழ் மூவேந்தர்கள் இவ்வாறே இருப்பீர்களாக’ என அறிவுறுத்திய புலமைச் செல்வியார் ஆவார். நெடுமான் அஞ்சி போர்க்களத்தில் வேல் பாய்ந்து இறந்த போது, ஔவையார் வருந்திப் பாடிய கையறுநிலைப் பாட்டு மிகவும் உருக்கம் வாய்ந்தது.

சங்கப் புலமைப் பெரும் செவ்வியராகிய இப்பெருமாட்டியார் பாடியனவாக உள்ள ஐம்பத்தொன்பது பாடல்களுள் அகப்பொருள் பற்றியன இருபத்தாறாகும். எஞ்சிய முப்பத்து மூன்று பாடல்களுள் புறப்பொருளுக்குரியனவாய்ப் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

மாந்தர் குலத்திற்குப் பெருமை சேர்த்த ஔவை பெருமாட்டியாரைப் போற்றும் வகையில் உலக மகளிர் நாளான இன்று (08.03.2024 - வெள்ளிக் கிழமை) காலை 10.00 மணிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சித் துறையால், சென்னை காமராசர் சாலையில் (மெரினா கடற்கரை) அமைந்துள்ள ஔவையாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தலும், தமிழ்ப் பெருமாட்டியின் திருவுருவப்படத்திற்கு மலர் வணக்க நிகழ்வும் நடைபெற உள்ளன. அமைச்சர் பெருமக்கள், மேயர், துணை மேயர், அரசு உயர் அலுவலர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள், பொது மக்களும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மட்டாங்கால் பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (06.03.2024) திறந்து வைத்தார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, கந்தர்வக்கோட்டை ஒன்றியக் குழுத் தலைவர் கார்த்திக் (எ) இரா.ரெத்தினவேல், வெள்ளாளவிடுதி ஊராட்சிமன்றத் தலைவர் பரமசிவம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.